# சிறப்பு தீர்மானம்

## திரு.I.ஜவகர் மண்டல தலைவர் வடக்கு, திரு.S.அமல செல்வன் 18–வது வார்டு மாமன்ற உறுப்பினர், திரு.V.ஜெயவிக்ரமன் 49–வது வார்டு மாமன்ற உறுப்பினர்களின் கோரிக்கை மனு மற்றும் மாமன்ற கூட்டத்தில் அனைத்து மாமன்ற உறுப்பினர்களின் ஒட்டுமொத்த கோரிக்கை

இம்மாநகராட்சிக்குட்பட்ட 52 வார்டு பகுதிகளிலும் சாலை பணிகள், கழிவுநீர் ஓடைப் பராமரிப்பு பணிகள் மற்றும் இதரப் பணிகளுக்கான பணிகள், திட்டப் பணிகள் ஆகியவை ஒப்பந்தக்காரர்களுக்கு வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. பல வார்டுகளில் வேலை உத்தரவு வழங்கப்பட்டு 6 மாத காலமாகியும் ஒப்பந்தகாரர்களால் பணிகள் துவங்கப்படாமல் சாலைகள் மற்றும் இதரப் பணிகள் முற்றிலும் சேதமடைந்த நிலையில் இருப்பதால் மாநகராட்சிக்கும் அரசிற்கும் பொது மக்களால் அவப்பெயர் ஏற்படும் நிலை இருந்து வருகிறது. எனவே இனிவரும் காலங்களில் வேலை உத்தரவு வழங்கப்பட்டு 7 (ஏழு) தினங்களில் பணி ஆரம்பிக்கப்படவில்லை என்றாலும், ஒப்பந்த காலத்திற்குள் ஒப்பந்த பணிகள் முடிக்கப்படவில்லை எனினும் ஒப்பந்தத்தினை ரத்து செய்து மீண்டும் மறு ஒப்பந்தப்புள்ளி கோர தெரிவிக்கப்பட்டுள்ளது.

**மாமன்ற தீர்மான எண்.336** **நாள். 30.05.2023**

**மேற்படி பொருள் தொடர்பாக மாமன்றத்தில் விவாதம் செய்து அனைத்து மாமன்ற உறுப்பினர்களின் ஆதரவுடன் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்படுகிறது.**

1. ஒப்பந்தகாரர்கள் வேலை எடுத்துவிட்டு ஒழுங்காக வேலை செய்வதில்லை என புகார்கள் வருகிறது. இனிவரும் காலங்களில் இம்மாநகராட்சியில் ஒப்பந்தப் பணிகள் செய்ய வேலை உத்தரவு பெற்ற 7 (ஏழு) நாட்களுக்குள் வேலை தொடங்கி ஒப்பந்த காலத்திற்குள் சம்மந்தப்பட்ட ஒப்பந்தகாரர் பணிகள் முடிக்கப்பட்டு முடிவறிக்கை பெறப்பட வேண்டும்.
2. ஒப்பந்த காலத்திற்குள் பணிகள் முடிக்கப்படாத ஒப்பந்ததகாரரின் ஒப்பந்தத்தை ரத்து செய்து மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்படுவதுடன் தமிழ்நாடு

நகராட்சிகளின் பொறியியல் கையேடில் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டுதலின்படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

3. ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்வதற்கு ஒப்பந்தப்புள்ளி நமூனா (Tender Schedule) சமர்ப்பிக்கும் போது தொழில்நுட்ப ஆவணங்களுடன் (Technical Bid) இதற்கு முன்னர் வேலை உத்தரவு பெறப்பட்ட பணிகள் ஏதும் நிலுவை இல்லை என மாநகராட்சியில் இருந்து சான்று பெறப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டும். அவ்வாறு சான்று சமர்ப்பித்த ஒப்பந்தப்புள்ளிகள் மட்டுமே தகுதியுடையதாக கருதப்பட வேண்டும்.
4. ஒப்பந்தகாரர்கள் செய்து முடித்த பணிகளுக்கான தொகை வழங்குவதற்கான பட்டியல்களை சம்மந்தப்பட்ட அலுவலர்கள் காலதாமதமின்றி தயார் செய்து பட்டியல்கள் உடனடியாக ஒப்பந்தகாரர்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

**மாமன்ற தீர்மான எண்.337 நாள். 30.05.2023**

இம்மாநகராட்சி பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டப்பணிகள் மற்றும் மூன்றாவது குடிநீர் அபிவிருத்தி திட்டப்பணிகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் நடைபெற்று வருகிறது. அதில் குழாய் பதிப்பதற்காக சாலைகள் தோண்டப்பட்டு பல நாட்களாக பணிகள் முடிக்கப்படாததால் பொது மக்களிடமிருந்து மாநகராட்சிக்கும் தமிழ்நாடு அரசுக்கும் அவப்பெயர் ஏற்பட்டு வருகிறது. மேலும் திட்டப்பணிகள் மூலம் பல சாலைகள் செப்பனிடப்பட்டு வருகிறது. அவ்வாறு செப்பனிடப்படும் சாலைகளை மாநகராட்சி அனுமதியின்றி தோண்டப்படுவதாக மாமன்ற உறுப்பினர்களால் புகார்கள் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மாநகராட்சி பகுதியில் அனுமதியின்றி சாலைகள் ஏதும் தோண்டப்படாமல் இருப்பதற்கு உரிய நடவடிக்கை எடுப்பதுடன் சம்மந்தப்பட்ட மாநகராட்சி அதிகாரிகள் அதனை உறுதிப்படுத்தவும் தீர்மானிக்கப்படுகிறது.